பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது. ௨ விரோதிஞு (1889) ஆவணிமீ" உ௯௳ ஆரம்பமானது

**பத்திரக்கிரயம்.**
வருஷம் ஒன்றுக்கு:
யாழ்ப்பாணப் பட்டினம் ரூ 5-00
இலங்கை தமிழும் 9-00
இலங்கை இந்தியா ரூ 8-00
இங்கிலீசும் தமிழும் 12-00
சோடுவாய்ப்பகுதி ரூ 9-00
இங்கிலீசும் தமிழும் 13-00
முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

**விளம்பரவிகிதம்.**
முதன்முறைக்கு:
,, ஓரங்குலம் ரூபா 10 00
,, அரைச்சுகலம் ,, 5-50
,, சாதாரண ,, 4 00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.
☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

"சீர்பூத்த கருவிஞ ஹணர்ச்சி தேங்கச் சிவம்பூத்த நிகமாக மக்கனோங்கப், பார்பூத்த புறச்சமய விருள்கணீங்கப் பரம்பூத்த சைவநெபாரோர் தாங்கப்,
பேர்பூத்த சிவானந்தத் தினிது தாங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானு தந்த, வார்பூத்த வறிவிச்சை தொழிலென் ருேது மதம்பூத்த விநாயகன்றுள் வணக்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாமர னுமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சரு } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுகஞு பங்குனிமீ" ககூஉ; ( 1934 மார்ஜ் 29 ) வியாழக்கிழமை. { இலக்கம்—ஙகூ.



## கந்தரலங்காரம்.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

இ—ள்: குமரேசர் இரு தாளும் சிலம்புஞ் சதங்கையும் தண்டையும்-குமாரசுவாமியினுடைய உபயதிருவடிகளும் அவற்றின்கண் விளங்குகின்ற சிலம்பு சதங்கை தண்டை என்னும் இவைகளும்; சண்முகமும்-அப்பெருமானுருடைய ஆறுதிருமுகங்களும்; தோளும் - பன்னிரு திருப்புயங்களும்; கடம்பும் - அத்திருப்புயங்களில் அணியப் பெற்றுள்ள கடப்பம் பூமாலையும்; எனக்குமுன்னே வந்து தோன்றிடின் - தமியேன் முன்னர் வந்து தரிசனப்படுமாயின்; எனை - என்னை; நாள் என்செயும் - தீய பலனைத்தரும் நட்சத்திரங்கள் என்ன செய்தல் முடியும்; வினை தான் என்செயும் - தீவினைகள் தாம் என்ன செய்ய முடியும்; நாடிவந்த கோள் என்செயும் - தேடிவரும் கிரகங்கள்தாம் என்ன செய்தல் முடியும்; கொடிய கூற்று என் செயும் - கொடிய யமன் என்ன செய்வான் எ—று

நாடிவந்த என்பதில் வந்த என்பது தெளிவுபற்றிவந்த வழுவமைதி. கடம்பு, ஆகுபெயர். ஏகாரம் தேற்றம். என்செயும் - என்ன தீமையைச் செய்தல் முடியும். இதினன்ன விறு ஒன்றுஞ்செய்தல் முடியாதென்பதை யுணர்த்தும் எதிர்மறைப்பொருளில் வந்தது. இச்செய்யுள் தேவாரத்தில் கோளறுபதிகத்தின் கருத்தமைந்ததாகும். இது சண்முகப்பெருமான் தியானமுண்டேல் எவ்வகையான தீமையுநேராவென்பதை யுணர்த்தியவாறும்.

சண்முகப் பெருமானுர் திருக்கோலத் தியானம் உண்டானுல் நாள் கோள் முதலிய எவையும் இடர் செய்யா என்றபடி. (ருஅ)

### நகரசங்கத்தில் சுதேசபாஷை

சென்ற ஞாயிற்றுக்கிழமை நடந்த நுவரெலியா நகரசங்கக் கூட்டத்தில் ஹாலாஎலியா வட்டாரப் பிரதிநிதியான மிஸ்ரர்: எம். டீ. எம். சமரசிங்கி என்பவர், தமது தாய்ப்பாஷையாகிய சிங்களத்திலேயே பேசினர்.

### "வாழ்க்கையில் அலுத்துப் போனேன்."

சென்ற திங்கட்கிழமை காலை கொழும்பைச் சேர்ந்த 25 வயதுடைய ஜோசப் என்னும் தமிழன் ஒருவன் க்ஷவரக் கத்தியால் தனது கழுத்தை வெட்டித் தற்கொலைசெய்ய முயற்சித்தான் என்று அறிகிறோம். அவனுடைய நிலைமை இ[illegible] ஆபத்தாயிருக்கின்றது என்று தெரிகிறது. இப்படித் தற்கொலைபுரிய எண்ணியமைக்குக் காரணம் என்னவென்று பொலிசார் கேட்டதற்கு, "நான் வாழ்க்கையில் அலுத்துப்போனேன்" என்று ஓர் கடுதாசியில் எழுதிக்கொடுத்தானும்!

### கொலையா? தற்கொலையா?
அழகிய பிணத்தின் மர்மம்!

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று மத்தியமாகாணத்தைச் சேர்ந்த அஸ்கிரியா என்னுமிடத்தில் உள்ள ஓர் காட்டில் ஓர் மனுஷி விறகு சேர்க்கையில், மரக்கிளையொன்றில் பிணமொன்று தொங்குவதைக் கண்டான். பிணம் மிக்க அழுகிய நிலைமையில், அவயவங்களிற் சில இல்லாதிருந்தது. அவை அழுகிக் கீழ் விழுந்துவிட்டிருக்க வேண்டும், அன்றேல், மிருகங்களாற் புசிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென யூகிக்கப்படுகிறது பிரேத விசாரணை புரிந்த டக்ரர், பிணம் 25 அல்லது [illegible]0 வயதுடையவனதாயிருத்தல் வேண்[illegible]ம் என அபிப்பிராயப்பட்டார். எவ்வாறு பிணம் மரத்தில் தொங்கியிருந்தது என்பது மர்மமாகவே இருக்கிறது.

### பதினொரு மாதத்தில் நான்கு குழந்தைகள்.

இங்கிலாந்திலுள்ள நார்போக், கிளிமெண்டைச்சேர்ந்த டெர்ரிங்டன் தெருவில், விவசாயத் தொழிலாளியாகவுள்ள ஒருவரின் மனைவியான ஸ்ரீமதி புரௌன் பதினொரு மாதத்திற்குள் இருமுறை இரட்டைப் பிள்ளைகளாக நான்கு குழந்தைகளைப் பெற்றுள்.

### கொலையாளிகள் சங்கம்.

சிங் சிங் என்னும் சிறையில் கொலையாளி சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களும், ஆயுள்பரியந்தம் தண்டனை விதிக்கப்பட்டவர்களுமான கொலையாளிகளே அச்சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

### வாலினுல் ருசிபார்க்கிறது.

அமெரிக்காவில் உள்ள ஒருவகை மீன் தன் வாலினுல் ருசிபார்க்கிறதாம். சாதாரணமாகவே ருசிபார்க்கும் உறுப்பு மீனின் தேகத்தின் எல்லாப் பாகங்களிலுமிருப்பதாகவே தெரிகிறது. ஆனவே மீன்களுக்கு வாய் அல்லாத மற்றப் பாகங்களிலும் ருசிபார்க்கும் உறுப்பு இருக்கிறதென்று தெரிகிறது.

### அமெரிக்காவில் சமதர்ம ஆட்சி?

அமெரிக்காவிலுள்ள பிரபல வித்தியா நிபுணரான டபிள்யூ. ஏ. உவேர்ட் என்பவர் அமெரிக்காவில் ஜனநாயக ஆட்சியை ஒழித்து, சமதர்ம (ருஷியாவிற் போல) இராச்சியத்தை ஸ்தாபிக்க பிரஜாதிபதியான மிஸ்ரர்: ரூஸ்வெல்ற்றும் அவர் சகபாடிகளும் முயற்சி செய்கின்றனர் என்று கூறுகிறார். இவர் கூற்று அமெரிக்காவில் பெருங் கிளர்ச்சியை உண்டுபண்ணியிருக்கிறது.

## அகில—இந்திய தேசிய மகா சபை.

### கொள்கை மாற்றப்படுமா?

### சட்டசபைகளைக்கைப்பற்றமுயற்சி.

டெல்கியில் நடக்கவிருக்கும் தேசிய மகாசபைத்தலைவர் மகாநாட்டிற்குத் தாம் ஆதரவு அளிப்பதாகப் பிரபல முஸ்லிம் தலைவராகிய மௌலானு அபுல் கலாம் அசாத் அவர்கள் செய்தி அனுப்பியிருக்கிறுர். சென்றசனிக்கிழமையன்று, டக்ரர் பிதன் சந்திரராய் அவர்கள் அசாம் மாகாணத்திற்குச் சென்று, இதுசம்பந்தமாக அங்குள்ள தேசிய மகாசபைத் தலைவர்களுடன் கலந்தாலோசித்தார். சட்டமறுப்பியக்கத்தை ஒழிப்பதோ அன்றேல் அதனை நடத்துவதோ என்ற பிரச்சினை, வரப்போகும் மகாநாட்டில் விவாதிக்கப் படமாட்டாது என்று இப்போது நிச்சயமாய்த் தெரிகிறது. மகாநாட்டிற் பங்கு பற்றவிருப்பவர்களில் அநேகர் இப்போதே சட்டமறுப்பை விடுத்து, சட்டசபைகளைக் கைப்பற்றித் தேசோத்தாரண வேலைகளில் தேசியமகாசபை ஈடுபடவேண்டுமென அபிப்பிராயங்கூறத் தொடங்கிவிட்டனர். வங்காளத்துப் பத்திரிகைகளை வாசிக்குமிடத்து, அங்குள்ளார் யாவரும் தேசிய மகாசபை சட்டசபைகளைக் கைப்பற்ற வேண்டுமென்ற கொள்கையுடையவராயே இப்போது இருக்கின்றனர்.

### பாராளுமன்றத்தவர்க்கு நேர்ந்த விபத்து.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் தொழிற்கட்சிப் பிரதிநிதியாயுள்ள மிஸ்ரர் கபிரியேல் பிறைஸ் என்பவர் சென்ற சனிக்கிழமையன்று ஓர் ஆற்றில் நீராடுகையில், அமிழ்ந்தி உயிர்துறந்தார் என்று அறிகிறோம்.

### ஜப்பானியரின் கோபம்.

தமது பொருள்கள்மீது உலகத்தில் உள்ள தேசத்தினர் பலர் அபரிமிதமான வரி விதித்துவருகின்றமையால், தமது நாட்டில் இறக்குமதியாகும் அந்நியப் பொருள்கள்மீதும் அபரிமிதமான வரியை விதிப்பதற்கான சட்டம் ஒன்றை ஜப்பானிய அரசினர் இப்போது இயற்றியிருக்கின்றனர்.

### கலாசாலைகளின் சித்திரப் படக்காட்சி.

சென்ற வியாழக்கிழமை (22-3-34) தொடக்கமாக, திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரியிலே யாழ்ப்பாணப் பகுதியிலிருக்கும் கலாசாலைகளின் சித்திரப் படக்காட்சி ஆரம்பமாயது. யாழ்ப்பாணத்திலுள்ள 12 ஆங்கிலக் கல்லூரிகளும், 28 ஆங்கிலக் கலாசாலைகளும், 5 தமிழ் ஆசிரிய கலாசாலைகளும், 60 தமிழ்க் கலாசாலைகளுமாக, இக்காட்சிக்கு 4000 சித்திரப்படங்களுக்குமேல் அனுப்பிவைத்தன. யாழ்ப்பாணத்தின் பலவிடங்களிலிருந்து ஆசிரியர்களும், மாணவர்களும், மாணவிகளுமாய்ப் பெருந்தொகையானேர் சென்று காட்சியைப் பார்த்துத் திரும்பினுர்கள். காட்சி நடந்த மண்டபமானது அவ்வழகிய சித்திரப்படங்களாலே விசித்திரக் காட்சியுற்று, ஓர் சிறிய சித்திரப்பட உலகமாய்ச் சிறந்து, யாழ்ப்பாணத்துக் கலாசாலை மாணவர்களின் சித்திரத் திறமையைத் துலாம்பரமாய்க் காட்டினது.

இக்காட்சியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சித்திரசிரியராகிய ஸ்ரீ கே. தாமோதரம் அவர்களுக்கே முதற்பரிசு கிடைத்திருக்கிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியுறுகின்றேம்.

## இந்தியச் செய்திகள்.

### விலிங்டனின் பிடிவாதம்.

பிரபல முஸ்லீம் தலைவரான கான் அப்துல் கபூர்கான் அவர்களின் மருமகன் ஒபய்துல்லாகான் அவர்கள் மூல்தான் மத்திய சிறைக்கூடத்தில் உண்ணுவிரதம் அநுட்டிப்பது சம்பந்தமாகப் பண்டிதர் மாளவியா அனுப்பிய தந்திக்கு இராசப் பிரதிநிதி பின்வரும் பதிலை அனுப்பியிருக்கிறுர்: "இது விஷயம் எல்லைப்புற மாகாண அரசினரைப் பொறுத்திருக்கின்றபடியால், யான் பிரவேசிக்க முடியாது."

### ஹிந்தி பொதுப் பாஷை.

சென்ற சனிக்கிழமையன்று புது டெல்கியில் ஹிந்தப்பாஷாபிமானிகள் மகாநாடு ஒன்று கூடியது. பரோடா மன்னரே தலைமை வகிக்கும்படி ஏற்பாடு இருந்தும், சாத்தியப்படாமையால் அவர் சமூகமளிக்கவில்லை யானமையால் அவரது தலைமைப் பேருரை மாநாட்டில் வாசிக்கப்பட்டது. 'நமது தேச முன்னேற்றத்திற்கு இந்நாட்டிற் பல்வேறு பாஷைகள் இருப்பது ஓர் முட்டுக்கட்டையாயிருக்கிறது. இந்தியா முழுமைக்குமான ஓர் பொதுப் பாஷை இருக்கவேண்டிய தாவசியமாகும். இதற்கு ஹிந்திப் பாஷையே சிறந்ததாகும்" என்று மன்னரின் தலைமைப்பேருரையிற் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### சட்டசபைப் பிரவேசம்.

ஐக்கிய மாகாணத்துப் பிரபல தேசியத் தலைவரான பாபு புருஷோத்தமதாஸ் தண்டன் அவர்கள், தேசியமகாசபை இப்போது சட்டசபைப்பிரவேசம் செய்ய முயற்சிப்பதைக் கண்டிக்கிறுர். "சட்டசபைப் பிரவேசத்தில் ஈடுபட்டால் தேசோத்தாரண வேலைகள் மிகவும் கஷ்டநிலைமையடையும். நாங்கள் பொறுமையுடன் எமது தொண்டினை ஆற்றிவரவேண்டுமேயன்றி, பிழையானவழியில் பொதுஜனங்களை இழுத்துச் செல்லலாகாது. சட்டசபைப் பிரவேசத்தால் கிடைக்கக் கூடிய பலன் ஒன்றுமில்லையென்பதே எனது சொந்த அநுபவமாகும்" என்ற ஸ்ரீ புருஷோத்தமதாஸ் ஓர் பத்திரிகை நிருபருக்குக் கூறினுர்.

### சென்னை வாலிபர் மகாநாடு.

சென்ற சனிக்கிழமை தொடக்கம் சென்னை வாலிபர் மகாநாடு ஸ்ரீ S சத்திய மூர்த்தி அவர்களின் அக்கிரா தலைமையில் நடைபெற்றது. புதிய அரசியல் திர்மாணிக்கப் படும்போது தேசிய மகாசபை சட்டசபைகளைக் கைப்பற்ற வேண்டும் என ஓர் தீர்மானம் மகாநாட்டில் நிறைவேறியது.

### சீக்கியரும் வகுப்புவாதத் தீர்ப்பும்.

"பிரிட்டிஷ் பிரதம மந்திரி அளித்துள்ள வகுப்புவாதத் தீர்ப்பு சீக்கியருக்கு விரோதமானதாகும். அதனை ஒழிப்பதற்கான இயக்கத்தை நாம் விரைவில் ஆரம்பிக்க வேண்டும். இந்தத் தீர்ப்பு முஸ்லீம்களுக்கு மாத்திரமே சாதகமாகவுள்ளது. சீக்கியராகிய நாம் கோரிய உரிமைகள் யாவும் நிராகரிக்கப்பட்டு விட்டன. நாங்கள் இந்த வகுப்புவாதத் தீர்ப்பை ஒழித்துப் பூரண சுவதந்திரம் பெறுதற்கான முயற்சியில் ஈடுபடுவோமாக" என்று சீக்கியரின் தேசிய மகாநாட்டுத் தலைவரான சர்தார் காரக்சிங் அவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை கூறினுர்.

### 160 வயதான இந்தியர்.

இந்திய எல்லைப் புறத்திலுள்ள கோகத்தில் உலகிலேயே மிகவும் வயதான ஒருவர் வசித்து வருவதாகத் தெரிகிறது. அவருக்கு இப்போது வயது 160 அவர் சப்பி என்னும் கிராம ஜமீன்தார். அவர் தேகசுகத்துடன் இருப்பதோடு கண் பார்வையுடையவராக இருக்கிறது.

## விளப்பரம்.

சைவபரிபாலன சபையாரால் மறவன்புலவில் இருக்கும் புண்ணிய நாச்சிமட தர்ம ஆதனங்களிலிருந்து வசூல் செய்யப்பட்ட சாப்பாட்டுக்குத் திறமான இவ்வருட நெல்லு விலைக்கிருக்கிறது. வேண்டுவோர் இந்துசாதன ஆலயத்தில் ஒழுங்கு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகவுரு பங்குனிமீ ௨௯உ வியாழக்கிழமை.

## சுன்னுகம் சம்ஸ்கிருதவித்தியாசாலை

பிராமணர்கள் சைவர்களாயுள்ளவர்கள் சம்ஸ்கிருதத்தைக் கிரமமாகப் பயின்று வடமொழியிலுள்ள ஆகம சாத்திரங்களை ஓதி ஆசாரியர்களாய் வருதற்கும், தாங்கள் செய்யுங் கிரியைகளை விதிப்படி கிரமமாகச் செய்தற்கும் சாதனமாக, இந்த யாழ்ப்பாணத்தில் ஒரு சம்ஸ்கிருதக்கல்லூரி ஆவசியகம் இருத்தல் வேண்டுமென்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் போன்ற பேரறிஞரின் பிரதான நோக்கமாகவிருந்தது. ஸ்ரீ நாவலரவர்கள் காலத்தில் நீர்வேலி, சங்கரபண்டிதர் ஒரு சம்ஸ்கிருத வித்தியாசாலையை இயன்ற வரையிற் செவ்வனே நடாத்தி, அந்த நோக்கத்தையும் ஒருவாறு பூர்த்தி செய்து வந்தார். அவரது புத்திரராகிய சிவப்பிரகாச பண்டிதர் காலத்தும் அவ்வித்தியாசாலை ஒருவாறு நடைபெற்று வந்தது. ஆனால் வடமொழியைப் பயில்வோர் பிற்காலத்திற் சிலரினுஞ் சிலராயினர். வேளாள வருணத்தவர்களை ஆசிரியர்களாகக் கொண்ட வித்தியாசாலையில் ஆகம சாத்திரங்களை முதல் வருணத்தாராகிய தாம் பயில்வது மரபன்றென்ற ஆசங்கை பிராமணருட் பலர்மாட்டு அக்காலத்திருந்ததெனக் காலங்கண்ட முதியோர் சொல்லக் கேட்டுள்ளேம். இது உண்மையாயினுமாகுக, பொய்யாயினுமாகுக; ஆனால் இக்குறைகளையெல்லாம் நீக்கி, பிராமணர்கட்கும், சைவக் குருவகுப்பினருக்கும் அவரவர் விரும்பியபிரகாரம் வடமொழிக் கல்வியை ஊட்டும் நோக்கமாக, இற்றைக்கு ஏறக்குறைய பதினைந்து வருடங்களுக்கு முன் பிரமஸ்ரீ ஜே ரீ சதாசிவ ஐயரவர்களின் பெருமுயற்சியால் சுன்னுகத்தில் ஒரு சம்ஸ்கிருத பாடசாலை ஆரம்பிக்கப்பெற்று, இந்தியாவிலிருந்து அழைக்கப்பெற்ற பிரமஸ்ரீ வி. சிதம்பர சாஸ்திரிகளைத் தலைமையாசிரியராகக்கொண்டு சென்றமீ வரையில் நடைபெற்றுவந்தது. இவ்வித்தியாசாலை ஆரம்பமானகாலத்தில் கணக்கிறந்த பிராமணச்சிறுவர், சைவச்சிறுவர் இதன்கண் சேர்ந்து, கல்விபயின்று ஈடேறுவர்; நம் குருவகுப்பினராயுள்ளார் உந்நத நிலையடைவர் எவ்வகையான கிரியைகளும் விதிப்படி கிரமமாக நடைபெறும் என்ற இவை போன்ற எண்ணம் அவ்வித்தியாசாலைத் தாபகர் உள்ளத்து மாத்திரமன்று, அறிஞர் பலருடைய உள்ளத்தும் பிறந்தது. அப்படிப் பிறந்தமைக்குக் காரணம் "குளந் தொட்டுத் தேரைவழிச் சென்றுரில்" என்பதே. ஆனால் கருமமேனில் நாமொன்று நினைக்கத் தெய்வம் பிறிதொன்றை நினைத்தவாறு முடிந்தது.

பிராமணர்களுட் பலரும், தேசிகர்களுட் பலரும் தம்பிள்ளைகளைத் தமிழ் வித்தியாசாலை, சம்ஸ்கிருத வித்தியசாலை யென்னுமிவைகட்கு அனுப்புவதைக் குறைத்து, ஆங்கில வித்தியாசாலைகட்கே அனுப்பத் தலைப்பட்டனர். அந்தணருள்ளே வருவாய் குறைந்தவர்கள் தம்பிள்ளைகட்கு நிரம்பிய ஆரிய திராவிடக் கல்வியை ஊட்டுவதை விடுத்து, தங்கள் காலத்திலும் தங்களுக்குப் பிற்காலத்திலும் தம்பிள்ளைகள் ஏதும் கிரியை கோயிற்பூசை என்னுமிவைகளைக் கல்வியறிவைக்கொண்டல்ல, பழக்கத்தைக்கொண்டு செய்தாற் போதுமென்று தவறாக நினைத்து, அப்படியே பழக்கிவிட்டார்கள். சிலர் மாத்திரம் தம் மக்களை, குறித்த சம்ஸ்கிருத வித்தியாசாலைக்குக் கல்வி பயிலும்படி அனுப்பினர்கள். ஆனால் எவ்வளவோ சிரமப்பட்டுப் பொருள் செலவிட்டு நடத்தப்பெறும் இந்த ஒரேயொரு வித்தியாசாலையைத் தளரவிடாது உந்நத நிலையில் வைக்க வேண்டுமென்ற அபிமானம் பிராமணர்களிடத்தாயினும், தேசிகர்களிடத்தாயினும் ஏனைய வித்தியாபிமானிகள், சனத்தலைவர்கள், ஊரவர்கள் எவர்களிடத்தாயினும் பிறக்கவில்லை. இங்ஙனம் அபிமானிப்பாரில்லாமையினால், பொருளுதவி இல்லாதொழிய சாஸ்திரிகள் போன்ற நிரம்பிய கல்வியறிவுடையாரை ஆசிரியராக நியமித்து இனிது நடத்துவதற்கு வேதனத்திற்குப் பணமில்லாதொழிய, இவ்வித்தியாசாலை அதிபர் குறித்த சாஸ்திரிகளை விடவேண்டியவரானார். ஆனால் ஆரம்பித்தவர் பிச்சைபெடுத்தாயினும் இந்த மேலான கைங்கரியத்தைச் செய்யவேண்டுமென்ற மகா வைராக்கியத்தோடு காணப்படுகின்றார். முயற்சியுடையார் இகழ்ச்சியடையாரென்பது மெய்.

ஆனால் நாம் நினைத்து நினைத்துக் கவலைப்படுவது வேறொன்றற்குமல்ல. 'எங்கள் புரோகிதர்களுக்கு குருமாருக்கு நிரம்பிய கல்வியறிவில்லை; புரோகிதர் மகன் புரோகிதர், குருக்கள் மகன் குருக்கள் என்று நடக்கிறார்கள்; குரு சரியாக நடந்தாற்றானே சீஷனும் சரியாக நடப்பது; குரு தன்னைத் திருத்திக்கொண்டு எங்களைத் திருத்த வரலாமே; இவர்கள் நடத்தும் பூசையென்ன, உற்சவமென்ன, கல்யாண ஹோமமென்ன, அந்தியேட்டி முதலாம் அபரக்கிரியையென்ன, புத்தசமயக் குருமாரைப்பார், இஸ்லாம் மதத்து லெவ்வையைப்பார், கத்தோலிக்க குருமாரைப்பார், பாதிரிமாரைப்பார், அவர்களும் இப்படித்தான் படிப்பில்லாமற்குருத்துவம் பூண்டிருக்கிறார்களா" என்பது போன்ற பயனற்ற வெற்றுரைபேசி அவர்களையுந் தம்மையும் பழுதுபடுத்தும் சிட்சிய வர்க்கத்தினராயுள்ளார், வேறு பல வகையான டாம்பீகச் செலவுகளைச் செய்பவர்கள் இந்த ஒரேயொரு வித்தியாசாலைக்குச் சிறிது பொருள் கிரமமாக உதவவொண்ணுதா? தேவையில்லாத இடங்களிலே பெருக்கும் வியாபாரத்திற்கும், அடுக்க அடுக்கத் தமிழ் வித்தியாசாலைகளையும், ஆங்கில வித்தியாசாலைகளையும் வைத்து நடாத்தி வரும் வித்தியாபிமானிகள் இந்தச் சம்ஸ்கிருத வித்தியாசாலைக்குச் சிறிது உதவி செய்யக் கூடாதா?

இங்குள்ள எத்தனையோ ஆலயங்களில் அதிகமாக வருந்திரவியத்திற் பெரும்பாகம் வேடிக்கைபார்த்தமாகவும், வியாச்சியம் முதலிய அனர்த்தங்கள் பொருட்டும் அநியாயமாகச் செலவாகின்றதே. இந்த ஆலய வருவாயில் ஒரு சிறுபாகத்தை வருஷந்தோறும் நன்கொடைப்பணமாக ஆலய அதிகாரிகள் உதவினற் பாவமா? பிராமணர்களாயும் சைவக் குருமாராயுமுள்ளவர்கள் தாங்கள் காலந்தோறும் பெறும் பெரிய தானங்கள் தட்சிணைகளில் ஒரு சிறிய பாகத்தை இவ்வித்தியாசாலையின் அபிவிருத்தியின் பொருட்டென்று ஒரு உண்டியலில் இட்டுவைத்துச் சேரச்சேர உதவினுற் பெரும் புண்ணியமல்லவா! "மனமுண்டானால் இடமுண்டு" "பலதுளி பெருவெள்ளம்" என்பன பழமொழிகள். ஆதலால் நமது சமயவிருத்திக்கேதுவாகிய இந்த மேலான வித்தியாதாபனத்தை நிலைதளரவிடாது மேலே சொல்லப்பட்ட ஒவ்வொருவரும் இதற்கு இயன்ற உதவி செய்யுங்கள். சேரும் பொருளைக் குறித்த வித்தியாசாலை அதிபருக்குக் காலதாமதமின்றி அனுப்பிவிடுங்கள். இப்படிச் செய்வது மேலான சமயத்தொண்டென்பதை மறந்துவிடாதீர்கள்.

---

## விளப்பரம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பத்தாம வருடாந்தக் கூட்டம் நிகழும் ஸ்ரீமுக வருஷம் பங்குனி மாதம் ௨௯-ந் திகதி (8-4-34) பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் நடைபெறும்.

விஷய சூசிகை.

1. வருடாந்தக் கூட்டத்தின் தவணை போஷேவலை ஏற்றுக் கொள்ளுதல்,
2. காரியதரிசியின் அறிக்கைப்பத்திரம்,
3. தனாதிகாரியின் அறிக்கைப்பத்திரம்.
4. காரியகர்த்தர்களைத் தேர்தல். (B. வகுப்பு)

யாழ்ப்பாணம், 24—3—34. } C. K. சுவாமிநாதன், காரியதரிசி, சை. வி. வி. ச.

(Mis 237 29-3-34)

## உலகப் பலவிநோதம்.

(முற்றொடர்)

"சட்டசபைக்கு இடம் விட்டுப் போன பின்பு என் தாயார் என்னை நினைத்து பார்த்து, 'ஏனடா, மூத்தவனே, படிக்கப் பஞ்சிப்படுகிறாய்; உன்னை நான் ஆனாக்கிப் பேராக்கி வைக்கவேணுமென்று பார்க்க நீ குடிக்குப் பிறந்து கெடுக்குந் தலைவைக்கப் பார்க்கிறாய்; நீ படியாமல் விசேஷமாய்ப் பேசிக் கொண்டிருந்தால், என் அண்ணன் தன் பெண்ணை உனக்கு ஒரு போதும் தர உடன்படமாட்டார். உன்னைப் பிறக்கிறுசிக்குப் படிப்பித்துப் பாசுபண்ணச்செய்தாலல்லால் பெண் தருவேன் என்று அண்ணன் சொல்லியிருக்கிறார்; உனக்கொன்று, ஒரு இரத்தம்; அப்படியொரு பெண் கிடைக்குமா? அவளுடைய அழகென்ன, குணமென்ன, நடையென்ன, அவளும் பெண் மற்றவரும் பெண்களா? அவள் வீட்டிலேயிருந்தால் அட்டலட்சுமியும் அங்கேவந்து சேருமே. அண்ணனுக்கும் வேறுபிள்ளைகளை இல்லை ஆனபடியால் அவரிடத்துள்ள பொருள் முழுவதும் அவளுக்குத்தானே சீதனமாகக் கிடைக்கும். என்கன் பிள்ளைகளை) பிறந்திருசர் கொண்டுபோக நீ ஏமாறத்தான் வேண்டிவரும்"; நல்ல குணத்தோடு படிக்கப் போ கொழும்புக்கு; இல்லாவிட்டால் இங்கே நான் உன்னை வைக்கமாட்டேன்; இங்கே சும்மாவிருந்து வாய்க்கினமாய்ச் சாப்பிட்டுவிட்டுத் தெருவழியே கூட்டாளிகளோடு திரியலாமென்று யோசிக்கிறாய்; உந்த எண்ணத்தை விட்டுவிடு. படிப்பு விஷயத்தில் நீ ......பார்க்கமாட்டேன்......" என்று பலவாறு கடிந்துரைத்தபோது எனக்கு அழுகையும் வெட்கமும் கவலையும் உண்டாயின. கொழும்புக்கு அன்றைக்கே புறப்பட்டுப் போகவேண்டுமென்று எண்ணினேன். "அம்மா, என்னை ஏன் ஏசுகிறீர்கள்; நான் இன்றைக்கே புறப்பட ஆயத்தம், பின்பு சோதனைபண்ணியல்லாமல் இந்த வாசலில் அடி வைக்கமாட்டேன்..." என்று நானும் ஒரு சுத்த வீரன்போற் பேசிவிட்டேன்.

* * *

"என் அம்மானுடைய மகளின் பெயர் இராசலட்சுமி; தாயார் சொன்ன குணங்கள் செயல்கள் அத்தனையும் அவளிடத்தில் உண்டு. அவள் அழகிலுஞ் சிறந்தவள்; நான் கொழும்பிற்குப் படிக்கப் போவதற்கு இசையாமல் விட்டிருப்பேனேயானால் இராசலட்சுமியைக் கைவிடவேண்டித்தான் வருமென்பது எனக்கு நன்றாய் தெரியும்; அதனாற்றான் நான் படிக்கப்போவதற்கு உடன்பட்டேன்.

* * *

"கொழும்புக்குப் போவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் நடந்த ஒரு வேடிக்கையான சமாசாரத்தை இப்பொழுது சொல்லுகிறேன். ஒருநாள் இரவு நான் போசனஞ் செய்யும்போது என் தாயாரைப்பார்த்து, "அம்மா, கொழும்புக்கு நான் படிக்கப்போனால் மீண்டு இங்கே வர எப்படியோ இரண்டு வருடஞ் செல்லும்; இராசம் எனக்கென நேர்ந்துவிட்ட பெண்தானே, சொந்த மச்சாள்தானே, சிறுபராயத்தில் என்னுடன் கூடவிளையாடி வந்தவள்தானே, நான் கொழும்புக்குப் போகுமுன் இராசத்தைக்கண்டு பயணஞ்சொல்லிவிட்டுப் போகலாமென்று நினைக்கிறேன்; நீங்கள் மாமிவீட்டுக்கு ஒழுங்குசெய்யுங்கள்' என்றேன்; அதற்கு என் தாய், 'தம்பி அதெல்லாம் சரியல்லவடா, அவர்கள் அதற்கு உடன்படவுமாட்டார்கள்; இனி அவர்கள் தான் சம்மதித்தாலும் அயல் அட்டத்திலுள்ளவர்கள் பழி சொல்வார்கள்; அதெல்லாம் வேண்டாம் மகனே, நான் இராசத்தைக் கண்டு நீ போகிறசமாசாரத்தைச் சொல்லிவிடுகிறேன்; நீ கவலைப்படாமற் கொழும்புக்குப் போய்வா, பிறகு எல்லாம் ஆகட்டும்' என்று சொல்ல, எனக்கு வந்த மனவருத்தத்திற்கும் ஆத்திரத்திற்கும் ஓர் அளவில்லை; 'அம்மா, இராசத்துக்கு நான் பயணஞ்சொல்லிவிட்டுப் போகவேணுமென்று கேட்க, நீங்கள் சொன்ன மறுமொழி எதுபோல இருக்கிறதென்றால், அம்மா எனக்குப் பசிக்கிறது சாப்பாடுகொடுங்கள் என்று கேட்க, மகனே, நீ உன் அலுவலுக்குப்போ, நான் உனக்காகச் சாப்பிடுகிறேன் என்று சொல்லுவது போலல்லவா இருக்கிறது' என்றேன். தாயார் நான் சொன்னதைக் கேட்டு என் திறமையை மெச்சிப் புன்னகைசெய்துகொண்டு, இந்த காளையிற் பிள்ளைகளுக்கு ஞானஞ்சொல்ல முடியாதென்று சொன்னாளேயல்லாமல், இராசத்திற்குப் பயணஞ் சொல்லும் விஷயத்திற்குச் சம்மதிக்கவில்லை. என்னைப் பெற்ற தாயை நான் குற்றஞ் சொல்லலாமா, பாவம் அவள் என்ன செய்வாள்; அந்த நாட்களில் அப்படிப்போய்ப் பயணஞ் சொல்வது எவருக்கும் பிடிக்காது. இந்த நாட்களாயிருந்தால், என் தாயை நான் அப்படிக்கேட்க வேண்டியதுமில்லை, மாமன் மாமியர் சம்மதம் பெறவேண்டியதுமில்லை; நேரிற் சந்தித்தே கடிதமூலமாகவோ பிரியாவிடை பெற்றுக்கொண்டு போயிருக்கலாம்.

* * *

"அம்மா, அப்படியானால் நான் என் மாமன் மாமிக்குப் பயணஞ்சொல்லமாட்டேன், என்று என் தாயாருக்குச் சொல்ல, அப்படியல்லவடா மகனே, அவர்களுக்குச் சொல்லாமற்போனாற் பெரும் குறைவரும், நீ போவதற்கு ஒருநாள் முந்தி அவர்கள் வீட்டுக்குப் போய்ப் பயணஞ் சொல்லிவிட்டுத்தான் போகவேணும், தாய் சொல்லைத் தட்டாதே" என்னவும், நானும் அங்கேபோனால் ஒருபோது இராசத்தைக் காணினுங் காணலாமென்ற எண்ணத்தினால், 'அதற்கென்ன அம்மா, நீங்கள் சொன்னதற்காக நான் அவர்களுக்குப் பயணஞ் சொல்லிவிட்டுப் போகிறேன் என்று பதில் சொன்னேன். பிரயாணத்திற்கு முதனாள் பின்னேரமாக அம்மான் வீட்டிற்குப் பயணஞ் சொல்லப்போனேன். போகும்போது, நான் இராசத்தின்மீது அன்பாயிருப்பதுபோல் அவளும் என்மீது உள்ளபடி அன்பாயிருப்பாளானால் நான் அவளைக் காணுவேன் என்று என் பேய்த்தனத்துக்கு ஏற்ப எண்ணிக்கொண்டு போனேன்; போன இடத்தில் என் மாமனும் மாமியும் என்னைப் பெரிதும் உபசரித்தார்கள். நான் கொழும்பிலேபோய் நடக்கவேண்டிய மாதிரி, படிக்கவேண்டிய விதம் இவைகளைப்பற்றியெல்லாம் அம்மான் எனக்கு அதிகம் புத்திகள் சொன்னார். 'தம்பி சாப்பாட்டைக் கவனிக்காமல் உடம்பை மெலியவிட்டுவிடாதே; ஏதும் நோயைத் தேடிக்கொள்ளாதே; போய்ச் சேர்ந்தவுடனே தந்தியடிக்க வேணும், பிறகு உங்கள் வீட்டுக்குக் காயிதமெழுதும்போது எங்களுக்கும் கிரமமாகக் காகிதமெழுதவேணும்' என்று மெத்த ஆதரவாக என் மாமி எனக்குச் சொன்னாள். ஐயோ, இப்படியான அன்புள்ள மாமி இராசத்தை நான் காண வேண்டுமென்று கேட்டால் காணவிடுவாளோ; என் தாய்க்குச் சொல்லியல்லவோ கருமத்தைப் பழுதாக்கிவிட்டேன் என்று எனனளவில் எண்ணினேன். இப்படியிருக்கும்போது 'அம்மா, அலுமாரியில் திறப்பு எங்கே வைத்திருக்கிறீர்கள்' என்ற இனிமையான சத்தம் என காதிற்பட்டது. அது வேறொருவருடைய குரலுமல்ல; இராசமே அப்படித் தாயைக் கேட்டுக்கொண்டு, தலைவாசலின் உட்பக்கக் கதவோரமாக நின்று தன் தாயிடம் வந்தாள். நானும் என் மனோரதம் நிறைவேறியதென்று சந்தோஷப்பட்டேன். ஐயோ, என் மாமியாகிய அந்தப் புண்ணியவதி என்னசெய்தாள் தெரியுமா, 'நான் வருகிறேன், தங்கச்சி எடுத்துத் தருகிறேன்' என்றுசொல்லிக்கொண்டு, வந்த மகளையும் திருப்பிக் கூட்டிக்கொண்டு போய்விட்டாள். நான்ராசத்தைஒருமுறை தானும் பார்க்க வாய்க்கவில்லை. அந்த நேரத்தில் என் மாமியைப் பிடித்துத் தின்னத்தக்க ஆத்திரம் எனக்கு உண்டானது. இந்த மாமியின் மகளைக் கலியாணம் முடியாமல் விட்டாலென்ன என்று கூட நினைத்தேன். அதிகஞ் சொல்வதென்ன, கவலையோடு என் மாமன் மாமிக்குப் பயணஞ்சொல்லிவிட்டு மீண்டு என் வீட்டுக்கு வந்தேன்.

* * *

"அடுத்தநாள் புறப்படவேண்டியநேரம் வரவே, எங்கள் குலதெய்வத்திற்கு விசேஷபூசை செய்வித்துப் பிரார்த்தனை பண்ணிக்கொண்டு நானும் என் தாயாரும் பயணம் புறப்பட்டோம். என் மாமனார் இன்னும் சில இனத்தவர்கள் என் தகப்பனுருடைய சிநேகிதர்கள் என்னுடைய கூட்டாளிமார் எல்லாரும் என்னைப் பயணமனுப்பத் துறைமுகம்வரையில் வந்தார்கள். சிலர் வள்ளத்தில் ஏறிக்கொண்டு புகைக்கப்பல் வரையில் என்னைப் பயணமேற்றிவிட்டு மீண்டார்கள். இதுவே நான் பிறந்து வளர்ந்து முதன்முதற் செய்த கப்பற் பிரயாணமாகும். என் உயிர் வரில் கிறக உடம்புமாத்திரம் கப்பலிற் போனதென்று சொல்லலாம்.

(வரும்.)

---

## அசரப்பா விவாகநீக்க வழக்கு.

லீலாவதியும் மனுச் செய்கிறார்.

அசரப்பாவிவாகநீக்கவழக்கில் தோல்வியடைந்த முதலாம் எதிரியான ஸ்ரீமதி லீலாவதி அஸரப்பாவும் உயர்தர நீதிமன்றத்திற்கு, டிஸ்திரிக் நீதிபதியின் தீர்ப்புக்கு எதிராகச் சென்ற செவ்வாய்க்கிழமை மனுச்செய்திருக்கின்றாரென்று அறிகின்றோம்.

## பின்னிற்க வேண்டாம்!

நமது தாய் நாட்டுச் சோதரர் பூகம்ப அநர்த்தத்தில் அகப்பட்டுக் கஷ்டப் படுவதைப் பற்றி நாடோறும் பத்திரிகைகளிற் படித்தும், அவர்களுக்கு உதவிசெய்ய முன்வர வேண்டாமா! இறந்த பல்லாயிரக்கணக் கானவர் போக, எஞ்சி யுள்ளோருக்கு ஊண், உடை, இல்லம் என்பனவற்றை அளித்தலில் உதாரத்துவத்திற் சிறந்த தமிழ் மக்களாகிய நாமும் பங்குபற்ற வேண்டாமா? ஆடவர்களே! பெண் மணிகளே, பாலியரே! உங்களுங்களால் இயன்ற தருமத்தை இந்த இந்துசாதனாலயத்திற்கு அனுப்பி வையுங்கள். எச்சிறு தொகையேனும் உவந்தேற்றுக் கொள்ளப்படும் போம் பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்.

மானேஜர்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| முன்னர் உபகரிக்கப்பட்டது. | 1095 | 32 |
| இணுவில் பிரசவ ஆஸ்பத்திரி டக்ரர் கேர் மூலமாக | | |
| மிஸ் இசபெல்சேர் | 5 | 00 |
| M. குரியன் | 3 | 00 |
| E. K. டயூசல் | 1 | 00 |
| E. P. செல்லமோன் | 3 | 00 |
| D. ஞானமுத்து | 3 | 00 |
| G. A. டானியேல் | 1 | 50 |
| E. வல ரஸ் | 1 | 00 |
| லில்லி ஸ்ரென்பர்ண் | 2 | 00 |
| ஞானம் செல்லப்பா | | 50 |
| L. சாமுயல் | | 25 |
| பேர்தா டிசில்வா | | 50 |
| எமலியா டி சில்வா | | 50 |
| S. நல்லரெத்தினம் | | 35 |
| டெய்லி மாணிக்கம் | | 50 |
| ஸ்ரீ D. A. செலமன்ஸ் | 2 | 00 |
| ஸ்ரீமதி ஜேக்கப் | | 50 |
| S. பூதி | | 25 |
| செல்லமுத்து | | 25 |
| செல்லாச்சி A. | | 25 |
| D. டெய்லி | | 25 |
| R. எதல் | | 50 |
| மூதலாய் | | 25 |
| ஸ்ரீ A. ஞானம் | | 50 |
| K. V. P. கிறிஸ்தோபர் | | 50 |
| W. J. செல்லையா | | 50 |
| மிஸ், மனோன்மணி | | 25 |
| இளையாச்சி | | 25 |
| மேபல் பெரீரா | | 75 |
| அலிஸ் | | 25 |
| அன்னம்மா | | 20 |
| மாணிக்கம் S. | | 25 |
| நல்லம்மா A. | | 25 |
| ஹெலன் C. | | 25 |
| M. சேரியன் | 1 | 00 |
| F. முத்தையா | 1 | 00 |
| பெயித் பொன்னு | | 50 |
| அலிஸ் செல்லையா | | 50 |
| அன்னு வீர சித்தம்பி | | 30 |
| | 33 | 50 |
| காலம் சென்ற தமது சகோதரியின் ஞாபகார்த்தமாக ஸ்ரீ V. T. S. சிவகுருநாதன் அனுப்பியது. | 5 | 00 |
| ஸ்ரீ N. சரவணமுத்து வட்டுக்கோட்டை | | 20 |
| ஆக ரூபா. | 1134 | 92 |


### மலேரியா மஹா தைலம்.

உங்களுக்கு மலேரியா என வழங்கும் மலேச்சுரக் தணியவேண்டில் இத்தைலத்தை உபயோகியுங்கள். இன்னும் தொய்வு ரோகத்துக்கு இது கைகண்ட தைலம் நூற்றுக்கணக்கானோர் நற்சாட்சிப்பத்திர மளித்துளர். கண்ணுக்கு இன்றியமையாதது. இருமல், தொய்வு, ஈளை, பீநசம், நெஞ்சு எரிவு, 'ஹிஸ்ரியா'' வாய்வு இப்படியான ரோகங்களை மாற்றுவதில் வலிமை உள்ளது.

இங்ஙனம்,
பொ. செல்லையா,
ஆயுர்வேத வைத்தியன்.
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்

(Y. 204, 12-2—11-2-35)


# சைவ பரிபாலன சபை.

## அதன் உற்பத்தியும் வளர்ச்சியும்.

(22—3—34-ன் தொடர்ச்சி.)

### HINDU HIGH SCHOOL.

"இச் சபையாரால் அத்தியாவசியகம் வேண்டற்பால தென்றுகண்டு ஸ்தாபிக்கப்பட்ட 'ஹிந்து இங்கிலிஷ் ஹைஸ்கூல்' இதுகாறும் எட்டுவகுப்புக்களுடனே மாத்திரம் நடைபெற்று வந்தது, அவ்வளவு கல்வி கற்பிப்பதில் மாத்திரம் விடுவேமாயின் கல்வித்தேர்ச்சி போதியதாக விராதெனவுணர்ந்து, உயர்ந்த கல்விகளைக் கற்பிப்பதற்காக இப்பொழுது மேற்படி சபையார் சென்னபட்டினத்திலிருந்து B. A. பட்டம்பெற்றுச் சிலவருடங்களாக உபாத்தியாயருத்தியோகத்தமர்ந்திருந்த ஆங்கில பாஷா பண்டிதரொருவராகிய ம. ா. ா. ஸ்ரீ, சி. செல்வத்துரைப் பிள்ளையவர்களை அழைப்பித்து இந்தப் பெப்ருவரி௴ சஉ முதலாக மேற்படி வித்தியாசாலைக்குச் சிரேஷ்ட உபாத்தியாயராக நியமித்தனர் இப்பண்டிதரவர்கள் வித்தியாசாலைக்குச் சமீபத்தில் இருப்பவராதலாலும், வேறு முயற்சி யாதுமில்லாது இதுவே அவர்களுக்கு முயற்சியாயுமிருப்பதாலும், இவ் வித்தியாசாலையில் மிகக் கவனமுடையவராகவிருந்து கல்வி கற்பிப்பாரென்பது யாவரும் அறிந்து கொள்ளத்தக்கது. இவர் மாத்திரமன்று, இதற்கு மானேசராக இருப்பவராகிய ம. ா. ா. ஸ்ரீ, அப்புக்காத்து சி. நாகலிங்க பிள்ளையவர்களும், சனி ஞாயிறு வாரங்களில் ஒருவகுப்பைப் படிப்பித்து வருகிறார்கள். அதுவுமன்றி அவர்கள் அதன் விருத்தியைவிரும்பி அடிக்கடி அவ்வித்தியாசாலையைத் தரிசித்து அங்குள்ள குறை நிறைகளை விசாரித்துப் பரிபாலித்து வருகின்றார்கள். அதுமட்டா! அச்சபையின் உபசபையாராகிய ஸ்ரீமான் தா. செல்லப்பாபிள்ளையவர்களும், ஸ்ரீ அ ச சபாபதிப்பிள்ளையவர்களும், சித. மு. பசுபதிச்செட்டியாரவர்களும், த. கைலாசபிள்ளையவர்களும், சபை இலேகராகிய ஸ்ரீ வி. காசிப்பிள்ளைப் பிரக்கிராசியார் அவர்களும் இதன் விருத்தியைக் குறித்து மிகக் கவனஞ்செலுத்தி ஆகவேண்டிய காரியங்களை நடாத்தி வருகின்றார்கள். ஸ்ரீ த. கைலாசபிள்ளை அவர்கள் தமிழ் படிப்பிப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், இவ் வாறெல்லாராலும் எல்லாவிஷயத்தாலும் இப்பொழுது விசேஷமடைந்திருப்பதினால் சைவசமயிகள் யாவரும் இனித்தங்களருமைப் புதல்வர்களை இவ்வித்தியாசாலைக்கு அனுப்புவதில் பின்நிற்காதிருப்பார்களாக யாவருமிதுதான்சமயமெனவுணர்ந்து தங்கள் பிள்ளைகளை அனுப்பி அங்கு நியமித்திருக்கும் சொற்ப சம்பளத்தைக் கிரமமாகக் கொடுத்து வருவார்களாயின் இவ்வித்தியாசாலை இன்னும் மிக உன்னத நிலைக்கு வருமன்றோ. வரவே சைவமாணவர்கள் உன்னத கல்வியைக் கற்றுக் கொள்வதற்குக் கொழும்புக்குச் செல்ல வேண்டியதுமில்லை, சென்னை நகருக்குச் செல்லவேண்டியதுமில்லை, சென்று பெரும் பொருள் செலவழிக்க வேண்டியதுமில்லை. அந்நிய தேசத்தவர்களாகிய பிறமதஸ்தர்கள் தங்கள் நயத்தின் பொருட்டு இங்கு வந்து வித்தியாசாலைகளை ஸ்தாபித்து நமது பிள்ளைகள் கொடுக்கும் வேதனங்கொண்டு அவர் மதத்தையும் பரப்பிக்கீர்த்தியையும் அடைய உதவி புரியும் சைவப்பிரபுக்களே, நம்நயத்தின் பொருட்டு நம்மவர்களால் ஸ்தாபிக்கப் பட்டு நடத்தப்படும் வித்தியாசாலைகளுக்கு உங்கள் பிள்ளைகளை மாத்திரம் அனுப்புவதாகிய உதவி புரிந்து நம்மதத்தையும் நம்மவர்களையும் கீர்த்தியடையச் செய்யப்படாதா? சைவர்களாக விருப்பவரெவரும் இதைக் குறித்துச் சற்றுச் சிந்தித்துத் தக்க உதவி செய்வார்களாக."

1892 ஆடி மாசி௴ 8ம் 9ம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலே நடந்த சுப்பிறீங்கோட்டு வளக்கொன்றில் வளக்காளிபக்கத்து நியாயவாதியாகஇங்குவந்த கௌரவ பெ. இராமநாதர் 10உ ஹிந்து ஹைஸ்கூலுக்குப்போய் பிள்ளைகளைப் பரீக்ஷித்து அவர்களுடைய திறமையைப் பாராட்டினர். அங்கு நடக்கும் கட்டட வேலையையும் பார்வையிட்டனர், அப்போது "Mr. Pasupathy Chettiar, when asked why he was building those massive pillars, which reminded him of, those at Tirumalnayaka's Palace in Madura, replied that he was erecting that building with those huge columns not to last for one or two generations but to last for ages" என்று பசுபதிச் செட்டியார் சொன்னாரென்று கௌரவ இராமநாதர் சொல்லியுள்ளார்.

### மகாசபைக்கூட்டம்.

இச்சபையின் மூன்றும் வருஷத்த மகாசபைக்கூட்டம் கர௵ தை௴ 29உ (10-29-2) கூடிற்று, அப்போது சபையின் மூன்றும் ஆவேதனமும் கணக்குகளும் வாசிக்கப்பட்டன. அக்கணக்குகளிவை:—

### வரவுசெலவு.

(விரோதி௵ வைகாசி௴ முதல் கர௵ ஆடி௴ முடிய 15 மாசங்களுக்கு) முன்௵ இருப்பு ரூபா 1-99 ம், சபை அங்கத்தவர் கையொப்பம் ரூபா 298-12½ ம், தானம் முதலிய நன்கொடை வரவு ரூபா 8-56 ம், நன்கொடை ரூபா 807-46 ம் ஹிந்து ஹைஸ்கூல் பங்களா கட்டுவதற்கு ரூபா 78-06 ம், பள்ளிக்கூடத் தோட்டத்தின் தேங்காய் முதலியன விற்று ரூபா 6-92 ம், பூநகரியார் நன்கொடையாலும் போர்த்தேங்காய் விற்றதாலும் ரூபா 27-62 ம், இந்து ஹைஸ்கூல் மாணவர் சம்பள வரவு ரூபா 527-04½ ம், ஸ்கூல் உண்டிகைப்பெட்டியால் ரூபா 8-41 ம், கடனும் ரூபா 83-45 ம் ஆக ரூபா 1860-67 வரவுவந்திருக்கிறது இதில் பிரசாரகர் வேதனம் ரூபா 157-50 ம், சஞ்சேதாக்கள் வேதனமும் சில்லறையும் ரூபா 48-85½ ம், பள்ளிக்கூட நிலவிலை ரூபா 567-75 ம் பள்ளிக்கூட பங்களா Temperory Building கட்டிய செலவு ரூபா 115-92 ம் பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் ரூபா 538-00 ம், பள்ளிக்கூடத்தின் சில்லறைச் செலவுகள் ரூபா 38-47 ம், பள்ளிக்கூடக்கட்ட (Permenant Building) கூலி, மேசன், தச்சு, கல்லு மண் முதலியன ரூபா 329-94 ம் ஆக ரூபா 1796-43½ செலவாகி ரூபா 64-23½ இருப்பு இருந்தது. சைவப்பிரகாச யந்திரசாலையினாலும் இந்துசாதனம் என்னும் பத்திரிகையினாலும் முன்வருஷ முடிவில் இருப்பு ரூபா 101 44 ம், புத்தகங்கள் தண்டுகள் அச்சிட்டதினால் ரூபா 485-64¼ ம், இந்துசாதனக் கையொப்பமும், பத்திரிகை விற்றதும் 576-60 ம், இந்துசாதனத்திற் பிரசுரித்த விளம்பரத்துக்காக ரூபா 118-75 ம், இந்துசாதனத்துக்கு நன்கொடை 25-00 ம் கடனைக் கொடுத்ததும் வாங்கினதும் ரூபா 97 ம் இந்துசாதனத்துக் காகிதம் விற்ற ரூபா 2 ம் ஆக ரூபா 1400-49¼ வரவு வந்திருக்கிறது. இதில் யந்திரசாலை வேலைக்காரர் வேதனம் வீட்டுவாடகை எழுத்து முதலியன ரூபா 628-12½ ம், இந்துசாதனத்துக்குக் காகிதம் முத்திரை முதலியன ரூபா 435-47¾ ம் முன்வருஷக்கடன் கொடுத்தது ரூபா 15-29 ம். கடன் கொடுத்திருக்கிறது ரூபா 201-40½ ம், கடன் வாங்கியதைக் கொடுத்திருக்கிறது 97-00 ம் ஆக ரூபா 1377-29¾ செலவாகி ரூபா 23-19½ இருப்பு இருந்தது.

II நிர்ணயம் திருவாக சபையார் இச்சபை விஷயங்களைக் கிரமமாகவும் திருப்திகரமாகவும் இவ்வருஷம் நடத்தியதற்காக அவர்களுக்குத் துதி சொல்லுதல் வேண்டும்" என்பது இது ஸ்ரீ அ. தில்லையம்பல பிள்ளையாற் பிரேரிக்கப்பட்டு ஸ்ரீ இ மயில்வாகன பிள்ளையால் அநுவதிக்கப்பட்டுச் சர்வ சம்மதமாயிற்று.

III நிர்ணயம்: "இச்சபை ஒழுங்கின்படி ஒருபோதும் வாராமலும் கையொப்பத்தொகை கொடாமலும் விட்டமையினாலே பத்துப்பேர் அதிகார சபையினின்றும் விலகிக் கொண்டார்களாதலால் அவர்களுடைய இடத்துக்கு ஸ்ரீ நா. மயில்வாகனபிள்ளை (பிறக்கிராசி) சி. சம்பந்தப்பிள்ளை (பிறக்கிராசி) க. வேலுப்பிள்ளை, க ஆறுமுகபிள்ளை, வை ஆ அம்பலவாணபிள்ளை, மா வெற்றிவேற்பிள்ளை, பொ. முத்தையபிள்ளை' சி. துரையப்பாபிள்ளை, கா. ஆறுமுகபிள்ளை, ராம. வேலுப்பிள்ளை என்னும் பத்துப் பேரையும் வரித்தல் வேண்டும்" என்பது. இது ஸ்ரீ ச. சபாரத்தின பிள்ளையால் பிரேரிக்கப்பட்டு ஸ்ரீ சி. துரையப்பாபிள்ளையால் அநுவதிக்கப்பட்டுச் சர்வ சம்மதமாயிற்று.

அக்கிராசனாதிபதியாகிய ம ா ா ஸ்ரீ செல்லப்பாபிள்ளையவர்கள் இச்சபையினின்றும் விலகுகிறேனென்று சபைக்கு எழுதிய கடிதத்தை ஸ்ரீ நாகலிங்கபிள்ளை மிகு துக்கத்தோடு வாசித்துக்காட்டி, அவர்கள் இச்சபைக்கு இதுவரையுஞ் செய்த உதவிகளையும் அவர்களுடைய பெருமைகளையுஞ் சொல்லி, அவர்கள் எழுதிய பரித்தியாகப் பத்திரத்தை ஏற்றுக் கொள்ளாதிருத்தல் கூடாது என்ற கருத்தமையப் பேசினர். சபையார் அப்பத்திரத்தை அங்கீகரித்துக் கொண்டனர். அப்போது

IV: ம ா. ா. ஸ்ரீ செல்லப்பாபிள்ளை அவர்கள் இச்சபையினின்றும் விலகிவிட்டமையினாலே அவர்களுடைய இடத்துக்கு இச்சபை அக்கிராசனாதிபதியாக ம ா. ா. ஸ்ரீ கௌரவ இராமநாதரவர்களை வரித்தல் வேண்டும்" என்று ஸ்ரீ ச. சண்முகபிள்ளை பிரேரித்தனர். அது ஸ்ரீ த. கைலாசபிள்ளையால் அநுவதிக்கப்பட்டு ஆனந்த கோஷத்துடன் சர்வசம்மதமாயிற்று. ம. ா. ா ஸ்ரீ இராமநாதரவர்கள் எழுந்து. இச்சபைக்குத் தம்மை அக்கிராசனாதிபதியாக வரித்துக் கொண்டமையினாலே தாம் செய்யும் உதவிகளுக்காக இவ்வூரவர்கள் செய்யும் நைம் நாறுவது இச்சபைக்குப் பொருளினாலும் சரீரத்தினாலும் உதவிசெய்தலே என்றும் தம்பால் எதும் உதவி பெறவேண்டி இனி வருவோரிடம் தாம் கேட்கும் வினாக்கள் சைவபரிபாலனசபை எப்படி நடைபெறுகின்றது? அதற்கு என்ன உதவி செய்தீர்? என்பனவே என்றும், விளங்க மதுரமாகக் கேட்டவர் செவி குளிரப்பேசினார்கள்.

V நிர்ணயம்: ம. ா. ா. ஸ்ரீ தா. செல்லப்பாபிள்ளையவர்கள் இவ்வளவு காலமும் இச்சபைக்கு அக்கிராசனாதிபதியாயிருந்து இதனை நடத்தினதற்காக இச்சபையார் துதி சொல்வதாகவும், அவர்கள் இப்போது விலகினதற்காகத் துக்கப்படுகிறதாகவும், காட்டி ஓர் கடிதம் அவர்களுக்கு எழுத வேண்டும்" என்பது. இது ம. ா. ா. ஸ்ரீ இராமநாதரவர்களாற் பிரேரிக்கப்பட்டது. இது ஸ்ரீ சி. நாகலிங்க பிள்ளையால் அநுவதிக்கப் பட்டுச் சர்வசம்மதமாயிற்று [illegible]

## "அரசகேசரி"யின் அதிக்குதி.

—(*)—

23-3-34-ல் வெளிவந்த அரசகேசரி "சைவ வித்தியா விருத்திச் சங்க பரிபாலனத்தின்கீழுள்ள சில வித்தியாசாலை யாசிரியர் தமக்குச் சேரவேண்டிய வேதனம் வருஷ முடிந்தும் கொடுக்கப்படவில்லையென்று மனஸ்தாபப்படுகிறார்கள்" என்று பரிதபிக்கின்றது. இப்படித்தான் முன்னொருநாள் கேகலைப்புலி வெள்ளாட்டுக்கு விம்மி விம்மி அழுதது. சங்க வித்தியாசாலை ஆசிரியர்களுக்கு வேதன விஷயமாக மனஸ்தாபம் சங்கத்திலாயினும், சங்க மானேஜரிடத்திலாயினும் எள்ளளவுமில்லை. அவர்களுக்கு அவ்விஷயத்தில் மனஸ்தாபம் சை. வி. வி. சங்க காரியதரிசி யிடத்திலுண்டு. அக்காரியதரிசி சொக்குப்போல் இருக்குமளவுமிருந்து விட்டு சட்டசபை விஷயத்தில் மானேஜர் அவர்களுக்கும் அவர்கள் கீழுள்ள ஆசிரியர்களுக்குமிடையில் பண்ணதக்க கோளாறுகளை மெல்ல மெல்லப்பண்ணிவந்து இப்பொழுது முழுதும்பண்ணிவிட முற்பட்டிருக்கின்றார். இதுதான் உண்மை. காறுமதியேன் அவனும் பொய் சொல்லான் என்றபிரகாரம் "ஆசிரியரின் வேதனத்திற்காகிய பற்றுச்சீட்டுக்களில்லாமல் சங்கக் காரியதரிசி 'செக்' பத்திரங்களிலே தமது கையொப்ப மிடுதற்கு மறுத்துவிட்டார்" என்றுகூறி அக்காரியதரிசியின் திருவிளையாடலை அரசகேசரியும் அநுவதிக்கின்றது.

பற்றுச்சீட்டின்றிச் "செக்"கிற் கையெழுத்துப் போடும் பாக்கியத்தை மறுத்தது, இதுகாறும் இக்காரியதரிசிக்கும், இச்சங்கத்திலிருந்த எக்காரியதரிசிக்கும் இல்லாத புதுப் புதிய வழக்கம். இந்தப் புதிய வழக்கம் இப்பொழுதுதான், இந்தச் சட்டசபைத்தெரிவு காலத்திற்றான் காரியதரிசிக்குக் கருக்கொண்டதை எல்லா ஆசிரியர்களும் நன்கு உணர்ந்துவிட்டார்கள். அரசகேசரி! நல்லவேளையில் நல்ல உதவிசெய்துவிட்டாய். நீ புது ஆள். உனக்குப் பழவழக்கம் புதுவழக்கம் ஒன்றுந் தெரியாது. நான் சொல்வதைக் கேள்.

ஆசிரியர்களுக்கும் மானேஜர்களுக்குமுள்ள சம்பந்தம் சாதாரணப்பிடி! சாதை ஏ! என்று மடிபிடிக்கும் சம்பந்தமன்று. அது தகப்பனுக்கும் பிள்ளைக்குமுள்ள சம்பந்தம் போல்வது.

மானேஜர் 'செக்'கைக் காரியதரிசிக்கு அனுப்புவார் அவர் கையெழுத்துப் போடுவார். ஆசிரியர்கள் பணத்தைப் பெறுவார்கள். மானேஜரிடம் பற்றுச்சீட்டைக் கொடுப்பார்கள். இதுதான் வழக்கிலிருந்த வழக்கம். இதிலென்ன பிழை? காரியதரிசியின் கண்கள் பற்றுச்சீட்டிற் படத்தான்வேண்டுமோ?

அப்பா! அரசகேசரி உனக்குவிளங்குகிறதல்லவா? இனி யாரிற்பிழை உண்மையைச் சொல்லு. ஆசிரியர்கள் ரிடத்தில் மனஸ்தாபங் கொள்ளுவார்கள் ஆனால், அந்தோ! அவர்கள் வேதனம் ஆக நேரத்துக்கு அகப்படுவதில்லைக் கொண்டுபார்ப்போம். "கொடுப்பது விலக்குங் கொடியோர் சுற்றம் உடுப்பதூஉ முண்பதூஉ மின்றி கெடும்" [illegible]

இனிமேல், ஆசிரியர்களுக்குச் சங்கத்திலாவது மானேஜரிடத்திலாவது மனஸ்தாபம் உண்டு என்று மனதாறும் நினைப்பாயா? நினைப்பாயாயின், 'சைவவித்தியாசாலை' ஆசிரியர்கள்........................ மனஸ்தாபப்படுகிறார்கள்' என்று நீ, அதிகம் வேண்டாம்; உன்னை நெருக்கலாகாது; நீ பச்சைக் குழந்தை—அப்படி மனஸ்தாபப்படும் ஒரு வித்தியாசாலை ஆசிரியர்களையாவது, ஒரு ஆசிரியரையாவது காட்டுபார்ப்போம்..!

சங்கத்திலுள்ள சகல ஆசிரியர்களும் காரியதரிசி ஒழிந்த சங்கத்தவர்களிலாவது மானேஜர் அவர்களிலாவது வேதன விஷயத்தில் மனஸ்தாபப்படவில்லை என்பதை எப்படித் தாபிக்க வேண்டுமோ அப்படியெல்லாந் தாபிக்கத் தயாராயிருக்கின்றேன்.

இங்ஙனம்
அ. சிவக்கொழுந்து,
சை. வி. வி. சங்க ஆசிரியர்.

நல்லூர்
29-3-34.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை நான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனையுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமூஸ்லி, சப்பேமூத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ட்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீர்மூன்னி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் சீரிழிவு, சீர்க்கடுப்பு, சீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்ஷவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைருத்தலுக்கு ரூபா ௧0. கால்ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடு வாயிராச்சியங்களுக்கு வீ. பி. சட்டம் இல்லாததினால் முன் மணியோடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞானஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு
(Y 179, 1-1-34 to 31-12-34.) சிலோன்.

---


## குடைமார்க் ஓடுகள்.

உற்பத்தியாக்குவோர்: ஐரோப்பிய மதுரைக் கம்பெனியார்.

இலேசானது; பெலனுனது; மலிவானது.
அடைமழைக்குங் கசியாது; உஷ்ணம் வீசாது.
10 தங்கமெடல்கள் பரிசாகப் பெற்றன.

### குடைமார்க் ஓடுகளே குவலயமெங்கும் அபிமானிக்கப் படுவன.

காங்கேசன்துறை அரசினர் சுகஸ்தானத்திற்கு 55000 குடைமார்க் ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன
118 ஓடுகள் 100 சதுர அடி விஸ்தாரத்தை மூடப் போதுமானவை
இந்த இனத்திலே கண்ணடி ஓடுகளும், தளவரிசைக் கற்களும், அழுத்தமான பைப்புகளுமுண்டு.
துறைமுகத்துக்கு அருகாமையில் கடற்கரைத் தெருவில் புதிதாய்த் திறந்திருக்கும் ஸ்ரோறிலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஜே. செருபீம் & பிறதர்,
ஏஜெண்ட்: பெரியதெரு யாழ்ப்பாணம்.
Y· 12—7-5-34



---


வந்துவிட்டன! வந்துவிட்டன!!

குறைந்தவிலை! குறைந்தவிலை!

## பெயர்பெற்ற பவுண்மார்க் ஓடுகள்.

திறமான "பவுண்மார்க்" ஓடுகள் தற்சமையம் யாழ்ப்பாணம் ரேகில் வந்திருப்பதால் இன்று தொடக்கம்



(1-3-34) ஏறக்குறைய ஒருவாரம் வரையில் மேற்படி ரேகில் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தேவையானவர்கள் முந்தியே ஆடர் அனுப்ப வேண்டியது.

சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்.
யாழ்ப்பாணம்.
1-3-34.
Phone No. 93.


---


கோடைகாலத்திற் பீடிக்கும்
தலைவலியைத் தடுப்பதற்காக
ஒருபோத்தல்

## லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
## தைலத்தை

வாங்கி வைத்திருங்கள்.

இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்.
(Y18. 11-2-33—31-3-34-)


---


காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

## மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

மிலிற்றறி, கவர்ன்மெண்ட், முனிசிப்பல்
கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மென்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக் கொள்ளும்

பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள தங்கமெடல் ஓடுகள் (Secretariat, State Council Chamber) இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கப்பெற்று வருகின்றன.

தலைநகரக் கந்தோர்:—64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை:-316—ம் நி-ர். கிட்டங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி, திருக்கோணமலை.

W· B S· தர்ம சூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏசென்ருய் சுன்னுகம் இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்ருர்.

Y 2. 31-3-34.)


---


## புறுடென்ஷல் வீமாக் கொம்பெனி.

1932-ம் வருஷ ஆதாய நன்கொடை (போனஸ்)

1932-ம் ஆண்டிற்கு முன்பதாகவே முடித்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 31/வீதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 28/வீதம்
1932-ம் ஆண்டிலேயே முடித்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ 23/= வீதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின்பேரில் ரூ. 1000-க்கு ரூ. 20 வீதம்,
அசைவற்ற சாத்திரமான நிதிகளில் பணங்களை மிக ஜாக்கிரதையுடன் சேமித்து வைத்திருப்பதினுலேயே மேற்கூறிய பெரும் நன்கொடைகளை பணமுட்டு நிறைந்த இக்காலத்திலும் கொடுக்க இயன்றது.

வீமாத் திருவதானுல்
புறுடென்ஷலில்
செய்து கொள்ளவும்.

உலகத்தில் மிகக் கூடிய தொகையானவர் சேர்ந்திருக்கும் கொம்பனி. தற்சமயம் 2 கோடி 75 லட்சம் பேர்கள் சேர்ந்திருக்கின்ருர்கள்.

350,00,00,000 ரூபாவுக்கு மேலானதொகை பொறுப்பானது

நமது இலங்கை அரசிறை வருமானத் தொகையைப்போல் ஏறக்குறைய 8மடங்கு வருமானமுடைய மிகப்பெரிய கொம்பனி. கிமிஷமொன்றிற்கு ரூ. 3000/ மேலான வருமானமுள்ளது.

வேண்டிய விபரங்கள் கீழ்க்காணப்படுபவர்களிடத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. இரத்தினசபாபதி,
Asst. Inspector,
Manipay.

க. சொர்ணலிங்கம்,
வடஇலங்கை மேற்பார்வைக் காறன்,
மானிப்பாய்

Delmege Forsyth & Co. Ltd. Agents.
The Prudential Assurance Co. Ltd Colombo
(Y. 180 1-1-34 to 31-12-34) வி.


---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed and Published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Thursday 29, March 1934.